



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக ஒன்றிய, மாநகர, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், காட்டுமன்னார்கோவில் எம்.ஆர்.கே கூட்டரங்கத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் உள்ளிட்ட மாநகர,ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர,

# பேரூர் கழக செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் வி, செந்தில்பாலாஜி அறிக்கை!



*கரூர், நவ. 20-*

*கரூர் மாவட்டச் செயலாளர் செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கரூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்/பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.11.2025 - வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ எம்.எல்.ஏ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*அதுசமயம் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்*

*பொருள் : S.I.R. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.ல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# கழக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டம்!

### அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

*சென்னை, நவ.20-*

*நவம்பர் 27 - தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது என தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவித்துள்ளார்.*

*அவரது அறிவிப்பு வருமாறு:-*

*தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்நாளை (21.11.2025 வெள்ளிக்கிழமை), காலை 9.30 மணி அளவில் மதுரை, மாட்டுத்தாவணி-ஒத்தக் கடை மெயின் ரோடு, உத்தங்குடி, முத்தையா நகரில் அமைந்துள்ள ""ஜேஎப்ஏ லக்கி பேலஸ்"" திருமண மகாலில், கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும் - பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி - மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, எம்.எல்.ஏ. - மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் - அமைச்சர் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா. தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் - விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா. செந்தமிழ் செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் - விவசாய அணி துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே. முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம். அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என். நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே.புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன், இராமநாதபுரம் பா. குணசேகரன், வெப்படை ஜி.செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.*

*இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.*

**பொருள்** *: நவம்பர் 27 - துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள், அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் குறித்து.*

*இவ்வாறு ஏ.கே.எஸ். விஜயன் அறிவித்துள்ளார்.*

### சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டக்

# கழகத் தோழர் ஆர்.முருகன் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

### இதுவரை 10 கழகக் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது!



**சென்னை, நவ.20-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டம், ஆர்.முருகன் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ. 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**

இதுவரை 10 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க. முத்தமிழ்செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் எம். விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் ஆகிய 9 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான ஆர்.முருகன் அவர்கள், 21.06.2025 சேலம் அருகே திருவாக்கவுண்டலூர் பை-பாஸ்சாலை அருகில் பேருந்து மோதிய விபத்தில் சிக்கி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 28.06.2025 அன்று உயிரிழந்த மேற்சொன்ன ஆர்.முருகன் குடும்ப நிவாரண நிதியாக, ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். முருகன் அவர்களின் மனைவி திருமதி எம். கோமதி அவர்களிடம் நேற்று (19-11-2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது, கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம், எம்.பி., வீரபாண்டி தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி வெண்ணிலா சேகர், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் ஏ.கே.தருண் ஆகியோர் உடனிருந்தனர்.

### 132 வது வட்டக் கழக கூட்டம்!

*சென்னை, நவ.20-*

*தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு வேண்டுகோளுக்கிணங்க தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் ஆலோசனைக்கிணங்க 132 வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (20.11.2025 வியாழக்கிழமை) இரவு 8 மணி அளவில் காமராஜர் காலனி 6வது தெரு சி பிளாக் அருகில் வட்ட அவைத் தலைவர் புலியூர்.எம் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.*

*இந்த கூட்டத்தில் தமிழக துணை முதல்வர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்படுகிறது.*

*இந்த கூட்டத்தில் கே. ஏழுமலை, எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு. சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.*

*எனவே 132 வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் மு. கணேசன்

### நவம்பர் 20 (2011)



**பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

**தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.**

**தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.**

**ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெங்களூர் வி. சிவசங்கர்

### நவம்பர் 20 (2003)



**கருநாடக மாநில பொறுப்புக்குழுச் செயலாளராக பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.**

**பெங்களூர் மாநகராட்சி அலசூர் வட்டத்தில் நான்கு முறை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகராட்சி சுகாதாரக்குழுவிற்கு தலைவராகவும் மற்ற காலங்களில் அனைத்து குழுக்களிலும் உறுப்பினராகவும் தேர்வு பெற்று பணியாற்றியவர்.**

**1997இல் கருநாடக மாநில அரசு, இவரது மாநகராட்சி மன்ற உறுப்பினர் பணியினை பாராட்டி “கெம்பே கவுடா” விருது வழங்கி பாராட்டியது.**

**மேலும் இவரது தொண்டினை போற்றும் வகையில் இவர் வசித்த அலசூர் பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு “சிவசங்கர் சாலை” என பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

**விலைவாசி உயர்வு, இந்தி எதிர்ப்பு ஆகிய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**